

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 352 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 16 – செவ்வாய்க்கிழமை 01 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 352 : Thiruvalluvar Year - 2054 - Aadi 16 - Tuesday 01 August 2023 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


# ‘தோழி’ விடுதிகள் - மகளிர் முன்னேற்றத்திற்கான முகவரி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 01-**

**உழைக்கும் மகளிர்க்காக கழக அரசு தொடங்கியுள்ள ‘தோழி’ விடுதிகள் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘தோழி விடுதிகள்’ - மகளிர் முன்னேற்றத்திற்கான முகவரி - என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

**மேலும் அப்பதிவில் முதல்வர் அவர்கள், “மகளிர் முன்னேற்றத்துக்கான நமது திட்டங்களுக்கு மேலும் வலுச் சேர்க்கும் திட்டம் இது!” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

**அதன் விபரம் வருமாறு:-**

கழக அரசு பதவியேற்றது முதல், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மகளிர் நலனுக்காகவும், அவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்திடவும் ஏராளமான முன்னோடித் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருவது காணுகிறோம்.

ஆட்சி அமைந்த வேளையில் ‘கொரோனா’ எனும் கொடுந்தொற்று உலகையே உலுக்கிக் கொண்டிருந்த போது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கொரோனாவை தமது ஆட்சித் திறத்தால் வென்றார் எனின் அது மிகையல்ல. கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்த மக்களின் வாழ்க்கையையும் மீட்டுத் தந்தார்.

**ஏழை எளிய மகளிர் பயன்பெற கட்டணமில்லா பேருந்துப் பயணம்!**

ஏழை எளிய மகளிர் பயன்பெறும் வகையில் கட்டணமில்லா பேருந்துப் பயணத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார் முதலமைச்சர். மாதத்துக்கு 800 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை பெண்களால் சேமிக்க இந்தத் திட்டம் காரணமாக இருக்கிறது.



ஐந்து பவுன் வரை நகைக்கடன் வைத்துள்ள பதிமூன்றரை லட்சம் பேருக்கு நகைக்கடனை ரத்து செய்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால் கொடுத்த மிக முக்கியமான வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**கல்லூரி மாணவியர்க்கு மாதம் ரூ.1000!**

பள்ளிக்கல்வியை முடித்து கல்லூரிக் கல்விக்குச் செல்ல முடியாத அரசுப் பள்ளி மாணவியர்க்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சர். இது ஏழை எளிய மாணவியர்க்கு பயனுள்ளதாக உள்ளது.

காலை உணவு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி உள்ளார். இது கல்வி - அறிவுப்பசியைப் போக்குவதற்கு முன்னதாக வயிற்றுப் பசியைப் போக்குவதாக அமைந்துள்ளது.

**தாய்மார்கள் நலன் - மேம்பாட்டிற்காக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!**

மகளிர் நலனையும், அவர்களது மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு செயல்படுத்திக் காட்டிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களது அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையிலும், அவரது நூற்றாண்டு விழாவிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விதத்திலும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” எனப் பெயர் சூட்டப்பட்டு, செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் தொடங்கப்பட உள்ளது.

இல்லறப் பொறுப்புகளுடன் பணிகளுக்குச் சென்று, அதன்மூலம் தங்கள் குடும்பங்களின் உயர்வுக்கு உழைத்து வரும் மகளிரின் உழைப்பை முறையாக அங்கீகரிக்க வேண்டும். இதற்காக ஒரு கோடி மகளிருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் போகிறார் முதலமைச்சர். பெண்களின் உழைப்புக்கான அங்கீகாரத்தை அரசு வழங்குகிறது. இதன் மூலமாக பொருளாதார வளத்தை மட்டுமல்ல; சமூக மரியாதையையும் மகளிர் பெறுவார்கள்.




**முதியோர் ஓய்வூதிய உயர்வு!**

இதனுடன் முதியோர் ஓய்வூதியத்தையும் உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

பல்வேறு ஓய்வூதியங்கள் பெற்று வருபவர்களின் வாழ்வாதார மற்றும் சமூக நிலையை கருத்தில் கொண்டு இந்த ஓய்வூதியத்தை ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 1,200-ஆக உயர்த்தி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்துடன் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள 74,073 நபர்களில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

30 லட்சம் பேருக்கு உதவப் போகும் அறிவிப்பாக இது அமைந்துள்ளது. இதனை விட முதலமைச்சரின் கருணை உள்ளத்துக்கு ஆதாரம் தேவையில்லை.

**முன்னேறும் மகளிர்க்கான முகவரி!**

தமிழ்நாட்டு மகளிர்க்கு கழக அரசு தீட்டிச் செயல்படுத்தி வரும் திட்டங்களின் வரிசையில் அடுத்ததாக இடம் பெறுகிறது, ‘தோழி’ மகளிர் விடுதிகள்!

அதுகுறித்து வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘தோழி’ விடுதிகள் - மகளிர் முன்னேற்றத்திற்கான முகவரி - என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

**முதல்வர் சமூக வலைதளப் பதிவு!**

முதல்வர் அவர்களின் அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தோழி விடுதிகள் - இது முன்னேறும் மகளிர்க்கான முகவரி!**

**மகளிர்க்குச் சொத்துரிமை, உள்ளாட்சியில் 33 விழுக்காடு ஒதுக்கீடு, உயர்கல்வியை ஊக்குவிக்கும் ‘புதுமைப்பெண்’ திட்டம், ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ என, மகளிர் முன்னேற்றத்துக்கான நமது திட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் திட்டம் இது!**

**டாக்டர் நடேசனாரின் ‘திராவிடர் இல்லம்’ போல், நமது திராவிட மாடலின் தோழி விடுதிகளும் வரலாற்றின் பக்கங்களில் நிலைகொள்ளும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் 2வது நாளாக ஆய்வு!

# ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் குழு - ஆளுநரிடம் மனு!

## விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரினர்!

**இம்பால், ஆக. 01-**

**வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூரில் கள ஆய்வு நடத்திய இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அம்மாநில ஆளுநரைச் சந்தித்தனர். மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அவர்கள் வலியுறுத்தினர்.**

**21 எம்.பி.க்கள் பயணம்!**

எதிர்க்கட்சிகளின் “இந்தியா” கூட்டணியைச் சேர்ந்த 21 எம்.பி.க்கள் மணிப்பூருக்கு 2 நாள் பயணமாகச் சென்றுள்ளனர்.

இக்குழுவில், தி.மு.க. குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, காங்கிரஸ் மூத்த தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரி, மக்களவை உள்ளிட்டவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

**குறைகளைக் கேட்டறிந்தனர்!**

வன்முறை ஏற்பட்ட சுராசந்த்பூர் பகுதிக்கு இம்பாலிலிருந்து பாதுகாப்புக் கருதி இரு குழுக்களாக அவர்கள் ஹெலிகாப்டரில் அங்குச் சென்றனர். அங்கு நிலவும் கள நிலவரம் குறித்து ஆய்வு செய்த அவர்கள், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தனர்.



வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூரில் கள ஆய்வு நடத்திய ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்களான காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரி, மக்களவை தி.மு.கழகக் குழுத்துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட எம்.பி.க்கள் குழுவினர்,இம்பாலில் உள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் அனுசுயா யுஜேவைச் சந்தித்து மாநிலத்தில் அமைதி ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளுமாறு கோரி மனு அளித்து உரையாடினார்கள்.

பாலியல் கொடுமைக்கு ஆளான பெண்களைச் சந்தித்து அவர்கள் ஆறுதல் கூறினர்.

இதன் தொடர்ச்சியாக இம்பாலில் உள்ள ஆளுநர் மாளிகையில், அம்மாநில ஆளுநர் அனுசுயா யுகேவை சந்தித்தனர்.

அப்போது, இந்தப் பயணத்தின் மூலம் அறிந்து கொண்ட விவரங்களையும், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைகள் குறித்தும் ஆளுநரிடம் அவர்கள் விவரித்தனர்.

**ஒரு சமூகத்திற்கு ஆதரவாக அரசு!**

மேலும், மணிப்பூர் நிலவரம் குறித்து பிரதமர் மோடிக்கு விரிவான அறிக்கையை அனுப்பும்படியும் “இந்தியா” கூட்டணி எம்.பி.க்கள் கேட்டுக்கொண்டனர்.

மாநிலத்தில் அமைதி திரும்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அவர்கள் ஆளுநரை வலியுறுத்தினர்.

குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்கு ஆதரவாக மணிப்பூர் பா.ஜ.க. அரசு செயல்பட்டு வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

---

### மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தவேண்டும்!

# பழங்குடி மக்களுக்கென தனி நிர்வாகம் தேவை!

## ‘இந்தியா’ கூட்டணிக்கு - பழங்குடிகளின் அமைப்பு கடிதம்!

*இம்பால், ஆக. 01-*

*மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்து வதுடன், பழங்குடி மக்களுக்கென தனி நிர்வாகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு ஆதரவு கோரி, ‘இந்தியா’ கூட்டணிக்கு பழங்குடிகளின் அமைப்பு கடிதம் எழுதியுள்ளது.*

**குக்கி சமூகத்தைச் சேர்ந்த 10 எம்.எல்.ஏ.க்கள் அறிக்கை!**

*மணிப்பூர் மாநிலத்தில் குக்கி சமூகத்தினர் வாழும் பகுதிகளை உள்ளடக்கி தனி நிர்வாகம் வேண்டும் என்று மாநில அமைச்சர்கள் இருவர் உள்பட குக்கி சமூகத்தைச் சேர்ந்த 10 எம்.எல்.ஏ.க்கள் கடந்த மே மாதம் அறிக்கை வெளியிட்டனர். இந்நிலையில், அம்மாநிலத்தில் உள்ள பழங்குடி அமைப்புகளின் கூட்டமைப்பு ‘இந்தியா’ கூட்டணிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.*

**பழங்குடி மக்கள் கடுமையாகப் பாதிப்பு!**

*அதில், மணிப்பூரில் வன்முறையால் அனைத்துத் தரப்பினரும் சிறுபான்மையினரான குக்கி ஜோ பழங்குடிகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பழங்குடி மக்களுக்கென தனி நிர்வாகப் பகுதிகளை அமைப் பது மட்டுமே நிரந்தரத் தீர்வாக அமையும் என்றும், இக்கோரிக்கைக்கு இந்தியா கூட்டணி அதரவு அளிக்க வேண்டும் என்றும் பழங்குடி அமைப்பு களின் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.*

---

### தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (3)!

## ஆகஸ்ட் 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஆகஸ்ட் 3 அன்று முரசொலி சிறப்பிதழ், “பத்திரிகையாளர் - ஊடகவியலாளர் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**